குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (30.1.2026) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோட்டூர்புரம் திட்டப்பகுதியில் ரூ.307.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 1800 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி.சிங், பெருநகர சென்னை மாநகராட்சியின் தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், அடையார் மண்டல குழு தலைவர் ஆர்.துரைராஜ்,தலைமை பொறியாளர்கள் வி.எஸ்.கிருஷ்ணசாமி, சு.லால் பகதூர், மேற்பார்வை பொறியாளர் திருமதி ஆர்.பிரமிளா, நிர்வாக பொறியாளர் விஜய்ஆனந்த் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

ரூ.95 கோடி மதிப்பீட்டிலான

3 திருக்கோயில்களுக்கு சொந்தமான சொத்துகள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பு!

இந்து சமய அறநிலையத்துறை துரித நடவடிக்கை!

சென்னை, ஜன.31- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின் படியும் இந்து சமய அறநிலையத்துறையின்பகட்டுப் பாட்டிலுள்ளததிருக்கோயில்களுக்குச்ஈ சொந்தமான சொத்துக்களைஈ ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் கந்தசுவாமி திருக்கோயில், சென்னை, மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயில் மற்றும் திருப்பூர் மாவட்டம், மணக்கடவு காட்டம்மன் திருக்கோயிலுக்குச் ஆகிய 3 திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.95 கோடி மதிப்பிலான சொத்துகள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர், கந்தசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான நிலங்கள் பல ஆண்டுகளாக தனி நபர்கள் ஆக்கிரமிப்பில் இருந்து வந்தது. இச்சொத்துக்கள் தொடர்பான மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கு (எண்.11824/2020) தீர்ப்பின்படியும், உயர்நீதிமன்ற அவமதிப்பு வழக்கு உத்தரவின்படியும் நேற்று (29.01.2026) செங்கல்பட்டு உதவி ஆணையர் திருமதி. ஆர்.ராஜலட்சுமி முன்னிலையில் காவல் துறை மற்றும் வருவாய் துறை அலுவலர்களின் உதவியுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணி தொடங்கப்பட்டு 39 ஏக்கர் 34 சென்ட் நிலங்கள் திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு 80 கோடி ஆகும்.

சென்னை, மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயிலுக்கு சொந்தமாக மயிலாப்பூர் லஸ் சர்ச் சாலையில் அமைந்துள்ள 3,100 சதுரடி வணிக மனையானது சதீஷ் ராவ் என்பவருக்கு 99 ஆண்டுகள் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. குத்தகைக்காலம் முடிவடைந்த பின்னரும் அவர் அம்மனையினை ஆக்கிரமித்து பயன்படுத்தி வந்த நிலையில், பெருநகர உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை சட்டப் பிரிவு 78-ன் படி சென்னை மண்டல இணை ஆணையர்-3 அவர்களால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி இன்று (30.01.2026) கபாலீசுவரர் திருக்கோயில் இணை ஆணையர்/ செயல் அலுவலர்திருமதிபெ.க.கவெனிதா முன்னிலையில் காவல் துறை மற்றும் வருவாய் துறை அலுவலர்களின் உதவியுடன் இந்த வணிக மனையின் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு திருக்கோ யில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட மனையின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.8 கோடியாகும்.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் காடு அனுமந்த ராய சுவாமி திருக்கோயிலின் குழுக்கோயிலான மணக்கடவு காட்டம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான 28 ஏக்கர் 28 சென்ட் புன்செய் நிலங்கள் தனிநபர்களின் ஆக்கிரமிப்பிலிருந்தது. இந்நிலையில் திருப்பூர் மண்டல இணை ஆணையர் உத்தரவின்படி இன்று (30.01.2026) திருப்பூர், உதவி ஆணையர் எம்.தமிழ்வாணன் முன்னிலையில் ஆக்கிரமிப்புகளை அகற்றி நிலங்கள் திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது.

இதன் தற்போதைய மதிப்பு ரூ.7 கோடி ஆகும்.

ஒட்டுமொத்தமாக 3 திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.95 கோடி மதிப்பிலான சொத்துகள் ஆக்கிரமிப்பிலிருந்து அகற்றப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டன. இந்நிகழ்வுகளின் போது இந்து சமய அறநிலையத் துறை துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் திருக்கோயில்களின் செயல் அலுவலர்கள் உடனிருந்தனர்.

அமைச்சர்கள் – நட்சத்திரப் பேச்சாளர்கள் கலந்து கொள்ளும்

சேலம் மத்திய மாவட்டத்தில் 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரை - கலந்துரையாடல் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!

சேலம், ஜன. 31- சேலம் மத்திய மாவட்டச் செயலாளர், அமைச்சர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி "தமிழ்நாடு தலைகுனியாது" பரப்புரை மற்றும் கலந்துரை யாடல் கூட்டங்கள் கீழ்க் கண்ட தேதிகளில் மற்றும் இடங்களில் சேலம் மத்திய மாவட்டக் கழகத்தின் சார்பாக நடைபெற உள்ளது.

கலந்துரையாடல் கூட்டங்களில் நட்சத்திரப் பேச்சாளர்கள், அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். எனவே கலந்துரையாடல் கூட்டங்களில் தொகுதியில் உள்ள முக்கிய பிரமுகர்கள், இளைஞர்கள், மாணவர்கள், தன்னார்வ அமைப்புகள், சமுதாய பெரியவர்கள், சங்கங்கள், தொழில் முனைவோர், கல்வியாளர்கள் உள்ளிட்டோர் சிறப்பாக கலந்து கொண்டு கோரிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை எடுத்துரைத்திட வேண்டுமெனவும், தொடர்ந்து நடைபெறும் பொதுக்கூட்டங்களில் பொதுமக்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கண்ட அனைத்துக் கூட்டங்களிலும் மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய பேரூர், கிளைக் கழகத் தோழர்கள், கழகத்தின் அனைத்து சார்பு அணியைச் சேர்ந்த நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமெனகேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் கோவி.செழியன் - 02.02.2026 திங்கட்கிழமை

பொதுமக்கள் சந்திப்பு நடைபெறும் இடம்

பொதுக்கூட்டம் நடைபெறும் இடம், தொகுதி

1. ஓமலூர் தொகுதி, சோழா கேஸ்கேட், ஓமலூர் - ஊராட்சி ஒன்றிய அலுவலகம், எதிரில், காடையாம்பட்டி.

தயாநிதி மாறன் எம்.பி. 05.02.2026 வியாழக்கிழமை

2. சேலம் மேற்கு ஜி.வி. என். திருமண மண்டபம், முத்து நாயக்கன்பட்டி, தொகுதி, திருவா கவுண்டனூர்.

06.02.2026 - வெள்ளிக்கிழமை

3. சேலம் வடக்கு, சேலம் மாநகராட்சி, தில்லை நகர், தொகுதி, தொங்கும் பூங்கா

அமைச்சர் பழனிவேல் - தியாகராஜன் 26.02.2026-வியாழக்கிழமை

4. சேலம் தெற்கு தொகுதி, கொங்கு திருமண மண்டபம், தாதகாப்பட்டி, அம்மாபேட்டை

இவ்வாறு மாவட்டச் செயலாளர், அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கையில் கூறியுள்ளார்.

நாளை பிப்ரவரி 1—ஆம் தேதி காலை நடைபெறுகிறது

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நாளை 1-2-2026 ஞாயிற்றுகிழமை காலை 10.00 மணியளவில் ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் ஜோதி திரையரங்கம் அருகில் அமைந்துள்ள, மாவட்டக் கழக அலுவலகத்தில், மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி அவர்கள் தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ, து.மூர்த்தி, மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் - மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1. பிப்ரவரி 3:- பேரறிஞர் அண்ணா நினைவு நாள்

2. பிப்ரவரி 11- அன்று மாலை நமது மாவட்டத்தில் உள்ள திருவிடந்தை கலைஞர் திடலில் நடைபெறவுள்ள BLA -2. BLC, BDA, BYO மண்டல சந்திப்பு மாநாட்டில் பங்கேற்பது குறித்து.

3. கழக வளர்ச்சி

அமைச்சர் தா.மோ.அன்பரசன்

செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் நேற்று (30.01.2026) ரிப்பன் கட்டட மாமன்றக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்!

29.01.2026 நிகழ்வுகள்

1. கொச்சி-கன்னியாகுமரி-தூத்துக்குடி இயற்கை எரிவாயு குழாய் திட்டங்களின் செயல்பாடுகள் என்ன?

கனிமொழி கருணாநிதி கேள்வி!

கொச்சி-கன்னியாகுமரி-தூத்துக்குடி இயற்கை எரிவாயு குழாய் திட்டத்தின் (KKTPL) தற்போதைய நிலவரம் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்து தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. விரிவான கேள்விகளை முன்வைத்துள்ளார். இத்திட்டத்தினால் விளைநிலங்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் குறித்து விவசாயிகள், உள்ளூர் மக்களிடமிருந்து பெறப்பட்ட புகார்கள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும், தொழில்நுட்ப ரீதியாகக் குழாய்கள் புதைக்கப்படும் ஆழம், கட்டுமானத்தில் பயன்படுத்தப்படும் திறந்த அகழி, கிடைமட்ட திசை துளையிடுதல் முறைகள், பாதுகாப்பு முன்னெச்சரிக்கையாக அமைக்கப்படும் எச்சரிக்கை விரிப்புகள் குறித்த விவரங்களைக் கோரியுள்ளார். குறிப்பாக, கட்டுமானப் பணிகளுக்குப் பிறகு நிலத்தை அதன் பழைய நிலைக்குச் சீரமைப்பதற்கான காலக்கெடு, விவசாயிகள் எவ்வித இடையூறுமின்றித் தங்களது பணிகளைத் தொடர்வதை உறுதி செய்ய அரசு வகுத்துள்ள தணிப்பு உத்திகள் குறித்தும் அவர் விளக்கம் கேட்டுள்ளார்.

2. சூழலியல் அனுமதி விதிகளில் மாற்றம் செய்தது ஏன்?

திருச்சி சிவா கேள்வி

பாதுகாக்கப்பட்ட சூழலியல் பகுதிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான அனுமதி விதிகளை மாற்றியமைத்துள்ளது குறித்து தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. மாநிலங்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார். நிலம் கையகப்படுத்துவதற்கான ஒப்புதல் பெறுவதற்கு முன்பே அனுமதி வழங்கப்படலாம் என்பதும் இந்த நடவடிக்கை தொழில்துறை அமைப்புகளின் கோரிக்கையின் பேரில் எடுக்கப்பட்டது என்பதும் உண்மையா எனவும் கேட்டுள்ளார். இந்தச் செயல்பாட்டில் காடுகளில் வசிக்கும் பழங்குடி சமூகத்தினருடன் கலந்தாலோசிக்கப்பட்டதற்கான ஆதாரங்களையும் அவர் கோரியுள்ளார்.

3. விமானப் போக்குவரத்துத் துறையின் பாதுகாப்பை உறுதிசெய்க!

எஸ். ஜெகத்ரட்சகன்

தி.மு.க. மக்களவை உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன், இந்திய விமானப் போக்குவரத்துத் துறையின் பாதுகாப்பு மற்றும் விசாரணை நடைமுறைகள் குறித்து மிக முக்கியமான கேள்விகளை எழுப்பியுள்ளார். விமான விபத்து விசாரணைப் பணியகம் (AAIB) சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் செயல்படும் நிலையில், அதன் நிறுவன சுதந்திரத்தை உறுதி செய்வதில் உள்ள தடைகள் மற்றும் 1997-ஆம் ஆண்டின் ஏர் மார்ஷல் ஜே.கே. சேத் குழுவின் பரிந்துரைகள் இன்னும் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படாததற்கான காரணங்களை அவர் கோரியுள்ளார். மேலும், விபத்து விசாரணை அறிக்கைகளை வெளியிடுவதில் நிலவும் காலதாமதம், வெளிப்படைத்தன்மை குறைபாடுகள் குறித்து அரசு ஆய்வு செய்துள்ளதா என்றும், பெரும்பாலான விபத்துகளுக்கு விமானியின் தவறு என்பதையே காரணமாகக் கூறி, பராமரிப்பு மற்றும் ஒழுங்குமுறை சார்ந்த முறையான குறைபாடுகள் மறைக்கப்படுகின்றனவா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். இறுதியாக, கடந்த இருபது ஆண்டுகளில் நிகழ்ந்த விமான விபத்துகளுக்கான காரணங்கள் குறித்த விரிவான தரவுகளை அரசாங்கம் பராமரிக்கிறதா என்பது குறித்தும் அவர் விளக்கம் கோரியுள்ளார்.

4. சதுப்புநிலக் காடுகளை பராமரிக்க நடவடிக்கை என்ன?

எஸ். கல்யாணசுந்தரம் கேள்வி

மிஷ்டி, டீஎன்-ஷோர் திட்டங்கள் மற்றும் பிற மத்திய/மாநில கூட்டுத் திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டில் சதுப்புநிலக் காடுகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து எஸ். கல்யாணசுந்தரம் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

மாநிலத்தின் கடற்கரையோரம், குறிப்பாக சுனாமி பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில், சதுப்புநிலக் காடுகள் வளர்ப்பு, மறுசீரமைப்பு மற்றும் கடலோர உயிரிப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக அனுமதிக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி விவரங்கள் யாவை, கடந்த மூன்று ஆண்டுகளில் மாவட்டம் வாரியாகவும், கடலோரப் பகுதி வாரியாகவும் சேர்க்கப்பட்ட அல்லது மறுசீரமைக்கப்பட்ட சதுப்புநிலக் காடுகளின் பரப்பளவு எவ்வளவு மற்றும் மாநிலத்தில் உள்ள சதுப்புநிலச் சூழல் அமைப்பின் மூலம் கார்பன் பிரித்தெடுத்தல், பல்லுயிர் பெருக்கம் மற்றும் சமூக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை? எனவும் கேட்டுள்ளார்.

5. விமானத் துறையில் இறக்குமதி சார்பை குறைத்திடுக!

ஈரோடு எம்.பி. கே. இ. பிரகாஷ்.

திமுக மக்களவை உறுப்பினர் கே. இ. பிரகாஷ், இந்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் விமானங்கள், என்ஜின்கள், அதன் உதிரிபாகங்களுக்காக வெளிநாடுகளைச் சார்ந்திருக்கும் நிலை குறித்து மிக முக்கியமான கேள்விகளை எழுப்பியுள்ளார். குறிப்பாக, பராமரிப்பு, பழுதுபார்ப்பு, மாற்றியமைத்தல் (MRO - Maintenance, Repair, and Overhaul) பணிகளுக்கான உதிரிபாகங்களை இறக்குமதி செய்வதால் ஏற்படும் கூடுதல் செயல்பாட்டுச் செலவுகள் மற்றும் அது விமான நிறுவனங்களின் நிதிநிலையில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து அரசாங்கம் மதிப்பீடு செய்துள்ளதா என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும், இந்தியாவிலேயே விமானப் பாகங்களைத் தயாரிக்கும் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலமும், உள்நாட்டு MRO வசதிகளை மேம்படுத்துவதன் மூலமும் இந்த இறக்குமதிச் சார்பைக் குறைக்க அரசு எடுத்து வரும் குறிப்பிட்ட நடவடிக்கைகள் மற்றும் கொள்கை முடிவுகள் என்ன என்பது குறித்தும் அவர் விளக்கம் கோரியுள்ளார்.

6. விமானிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துக!

ஈரோடு எம்.பி. கே.இ. பிரகாஷ்.

தி.மு.க. மக்களவை உறுப்பினர் கே.இ. பிரகாஷ், இந்திய விமான போக்குவரத்துத் துறையில் அதிகரித்து வரும் விமானங்களின் எண்ணிக்கை, விமான நிலைய விரிவாக்கப் பணிகளைக் கருத்தில் கொண்டு, தற்போதைய விமானி-விமான விகிதம் குறித்து அரசாங்கம் முறையான மதிப்பீடு செய்துள்ளதா என்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். குறிப்பாக, விமானப் பாதுகாப்பு ஊழியர்களின் ஓய்வு நேரம், விமானிகளின் பணி-தனிப்பட்ட வாழ்க்கை சமநிலை ஆகியவற்றில் சமரசம் செய்யாமல் விமான சேவைகளைத் தடையின்றி நடத்தப் போதுமான விமானிகள் உள்ளார்களா என்றும், ஒரு விமானத்திற்குத் தேவையான குறைந்தபட்ச விமானிகளின் எண்ணிக்கை குறித்த விதிமுறைகளில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்படுமா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும், விமானிகளின் பற்றாக்குறையைப் போக்கப் பயிற்சித் திறனை மேம்படுத்துதல் உள்ளிட்ட புதிய முயற்சிகளை அரசு திட்டமிடுகிறதா என்பது குறித்தும் அவர் விளக்கம் கோரியுள்ளார்.

7. அங்கீகரிக்கப்படாத கதிரியக்கப் பொருட்கள் விற்பனையை தடுக்காதது ஏன்?

எஸ். ஆர். சிவலிங்கம் கேள்வி!

அணு உலைகளை இயக்கும் கூட்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களைக் கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்ட SHANTI சட்டத்தின்கீழ் அரசாங்கம் அறிவுறுத்தியுள்ள ஒழுங்குமுறை வழிமுறைகள் குறித்து மாநிலங்களவையில் தி.மு.க. எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி கேள்வி எழுப்பியுள்ளார். பாதுகாப்பு குறைபாடுகள் மற்றும் கதிரியக்கப் பொருட்களின் அங்கீகரிக்கப்படாத விற்பனை தொடர்பான பன்னாட்டு குற்றச்சாட்டுகள் குறித்தும் அவற்றை எதிர்கொள்ள அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் அவர் கேட்டுள்ளார்.

8. தமிழ்நாட்டில் கேலோ இந்தியா திட்டத்தின் செயல்பாடுகள் என்ன?

ராஜாத்தி சல்மா

தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ள கேலோ இந்தியா மையங்கள் (KIC) மற்றும் கேலோ இந்தியா மாநில சிறப்பு மையங்களின் (KISCE) எண்ணிக்கை குறித்து திமுக எம்.பி. ராஜாத்தி சல்மா கேள்வி எழுப்பியுள்ளார். கேலோ இந்தியா திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, மாநில வாரியாக திட்ட முன்மொழிவுத் தொகை, ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் விடுவிக்கப்பட்ட தொகை குறித்த விவரங்கள், கடந்த மூன்று ஆண்டுகளில் கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை என்ன? தற்போது மாநிலத்தில் கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று வரும் பட்டியல் சாதிகள்/பழங்குடியினர்/இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உட்பட விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை என்ன? மற்றும் மாநிலத்தில் கூடுதல் மையங்களுக்கு அனுமதி வழங்கவோ அல்லது இத்திட்டத்தை விரிவுபடுத்தவோ அரசு திட்டமிடுகிறதா? என்றும் அவர் கேட்டுள்ளார்.

9. அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதத் துறைகளில் பெண்கள் முன்னேற்றத்திற்கான நடவடிக்கை என்ன?

ராஜாத்தி சல்மா

அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) ஆகிய உயர் கல்வியில் சேர்ந்துள்ள பெண்களின் சதவீதம் மற்றும் நாட்டில் துறைவாரியாக STEM வல்லுநர்களாகப் பணிபுரியும் பெண்களின் சதவீதம் குறித்து தி.மு.க. எம்.பி. ராஜாத்தி சல்மா கேள்வி எழுப்பியுள்ளார். STEM கல்வி மற்றும் தொழில்களில் பெண்கள் பாதியில் படிப்பை நிறுத்தும் விகிதத்தைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் என்ன ?

(இ) STEM துறைகளில் பெண்களை ஊக்குவிக்க வும் ஆதரிக்கவும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் மேம்பாட்டு முயற்சிகள் யாவை? என்றும் அவர் கேட்டுள்ளார்.

10. தமிழ்நாட்டில் வழங்கப்பட்ட MSME கடன்கள் எவ்வளவு?

அருண் நேரு

தி.மு.க. மக்களவை உறுப்பினர் அருண் நேரு, தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (MSME) நிதி நிலைத்தன்மை குறித்து விரிவான கேள்விகளை முன்வைத்துள்ளார். கடந்த மூன்று நிதியாண்டுகளில் தமிழ்நாட்டில் முன்னுரிமைத் துறை கடன்களின் கீழ் MSME-க்களுக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன் எவ்வளவு என்பது குறித்த மாவட்ட மற்றும் ஆண்டு வாரியான புள்ளிவிவரங்களை அவர் கோரியுள்ளார். மேலும், பிணையில்லா கடன் வசதி வழங்கும் குறு மற்றும் சிறு தொழில்களுக்கான கடன் உத்திரவாத நிதி அறக்கட்டளை (CGTMSE) திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் எத்தனை நிறுவனங்கள் பயன்பெற்றுள்ளன என்பது குறித்தும், தற்போதைய சூழலில் MSME கடன்களுக்கான வாராக்கடன் (NPA) விகிதம் எந்த அளவில் உள்ளது என்பது குறித்தும் அவர் விளக்கம் கேட்டுள்ளார்.

11. மாநிலங்களுக்கு மேம்படுத்தக்கூடிய உபகரணங்கள் ஒதுக்கீடு என்ன?

டாக்டர் கனிமொழி சோமு

நாட்டில் உள்ள 83,993 4ஜி தளங்களில் 5ஜி-ஆக மேம்படுத்துவதற்கான கருவிகள் வழங்கப்பட்ட தளங்களின் எண்ணிக்கை விவரங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் கனிமொழி சோமு கேள்வி எழுப்பியுள்ளார். மாநிலங்களுக்கு 4ஜி அல்லது 5ஜி-ஆக மேம்படுத்தக்கூடிய உபகரணங்களை ஒதுக்குவதற்காகப் பின்பற்றப்பட்ட அளவுகோல்கள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வார்டு 38 அன்னை சந்தியா நகர் பிரதான தெருவில் சென்னை துறைமுகம் கழகத்தின் சமூக பொறுப்பு நிதி மூலம் ரூபாய்.64 லட்சங்கள் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட உள்விளையாட்டு அரங்கத்தை சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி. திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், மேற்குப் பகுதி நிர்வாகிகள் லோகநாதன், கோவிந்தராஜ், மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் ஏ.டி.மணி, வட்டக் கழகச் செயலாளர்கள் எஸ்.எல்.சுந்தர், தேவன், ஏழுமலை, சசிகுமார், ராஜன், மற்றும் கழக நிர்வாகிகள் மகளிரணி நிர்வாகிகள் உடனிருந்தனர்.